ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**திகதி** 2017.10.17

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - ஓகத்து 2017

### பொதுநோக்கு

இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2017 ஓகத்தில் கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது. 2017 ஓகத்தில் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்த போதும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி வர்த்தகப் பற்றாக்குறையில் விரிவாக்கமொன்றைத் தோற்றுவித்தது. 2017 ஓகத்தில் சுற்றுலா வருவாய்கள் அதிகரித்தபோதும் விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையுடன் சேர்ந்து தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக வெளிநாட்டு நாணயக் கணக்கின் செயலாற்றம் தளர்வுற்றுக் காணப்பட்டது. எனினும், சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கு அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நாணய காலநிதியிடல் வசதியின் இரண்டாவது தொகுதி பெறப்பட்டமை, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தை என்பனவற்றிற்கு 2017இல் ஏற்பட்ட தொடர்ச்சியான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் பெறுகைகள் மூலம் ஆதரவளிக்கப்பட்டது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக ஐ.அ.டொலர் 1 பில்லியன் இலக்கு விஞ்சப்பட்டு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 ஓகத்தில் அதிகரித்து முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டம் + வசதி மீளப்பெறப்பட்டமையின் சாதகமான தாக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது. இதன்படி, 2017 ஓகத்தில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,001 மில்லியனுக்கு 15.5 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தமைக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளை அடுத்து, வேளாண்மை ஏற்றுமதிகள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

2017 ஓகத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 740 மில்லியனுக்கு 13.1 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான ஆடை ஏற்றுமதிகள்

மேம்பட்டமையின் காரணமாக புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 10.1 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) ஐ.அ.டொலர் 433 மில்லியனுக்கு அதிகரித்தன. இதன்படி, 2017 ஓகத்தில் ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 186 மில்லியனுக்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்தமை (ஆண்டுக்காண்டு) ஆடை ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கு 68 சதவீதத்திற்கும் கூடுதலாக பங்களித்தது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா மற்றும் பாரம்பரிய சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகள் இம்மாத காலப்பகுதியில் முறையே 4.4 சதவீதத்தினாலும், 4.6 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. மேலும், 2017 ஓகத்தில் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 74.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவுகளும் நீர்க்கல மற்றும் வான் போக்குவரத்து எரிபொருளின் விலைகளும் காரணமாக அமைந்தன. மேலும், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 35 மில்லியனுக்கு 35.8 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு காய்கறிகள், பழங்கள் மற்றும் உள்ளீட்டுத் தயாரிப்புக்களின் அதிகரித்த ஏற்றுமதிகளே காரணமாகும். அதேவேளை, இம்மாத காலப்பகுதியில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் (23.6 சதவீதம்) பொறிகள் மற்றும் எந்திரசாதனங்கள் (14.0 சதவீதம்) இறப்பர் உற்பத்திகள் (4.1 சதவீதம்) என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. எனினும், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன.

2017 ஓகத்தில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 255 மில்லியனுக்கு 22.8 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) கணிசமாக அதிகரித்து பெரும்பாலும் அனைத்துத் துணை வகைகளினதும் செயலாற்றம் மேம்பட்டமையினைப் பிரதிபலித்தன. தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 131 மில்லியனுக்கு 20.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகளில் குறைப்புக் காணப்பட்ட போதும் பன்னாட்டுச் சந்தைகளில் உயர்ந்த விலைகள் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட தேயிலைக்கான உயர்ந்த விலைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2017 ஓகத்தில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2016 ஓகத்தின் கிலோகிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 4.33 இலிருந்து கி.கிறாமொன்றுக்கு ஐ.அ.டொலர் 5.29இற்கு 22.3 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 2016 ஓகத்தில் 25.1 மில்லியன் கி.கிறாமிலிருந்து 2017 ஓகத்தில் 24.8 மில்லியன் கி.கிறாமிற்கு 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, இம்மாத காலப்பகுதியில் வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் 40.5 சதவீத்தினால் (ஆண்டுக்காண்டு) குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு மிளகு, கறுவா மற்றும் கராம்பு என்பனவற்றின் அதிகரித்த ஏற்றுமதி அளவுகளே முக்கிய காரணமாகும். ஐரோப்பிய ஒன்றியச் சந்தைகளுக்கான மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிகளின் மீதான தடை அகற்றப்பட்டமை, முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டம் + வசதி மீண்டும் கிடைக்கப்பெற்றமை என்பனவற்றின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 81.9 சதவீதம்கொண்ட ஆண்டுக்காண்டு வளர்ச்சியின் காரணமாக 2017 ஓகத்தில் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 18 மில்லியனுக்கு 38.6 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 7,413 மில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தமைக்கு தேயிலை, பெற்றோலிய உற்பத்திகள், போக்குவரத்துச் சாதனங்கள், வாசனைத்திரவியங்கள் மற்றும் கடலுணவு என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட அதிகரித்த வருவாய்களே முக்கிய காரணங்களாகும். மாறாக ஒன்றுசேர்ந்த அடிப்படையில் புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் தோற்பொருட்கள், பயணப் பொருட்கள் மற்றும் கலணிகள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில், இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிக்கான முதன்மைச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | ஓகத்து 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | ஓகத்து 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - ஓகத்து 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - ஓகத்து 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **654.3** | **740.1** | **13.1** | **5,337.6** | **5,562.3** | **4.2** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 393.4 | 433.2 | 10.1 | 3,333.7 | 3,283.4 | (1.5) |
| இதில் ஆடைகள் | 372.8 | 402.3 | 7.9 | 3,155.1 | 3,088.1 | (2.1) |
| இறப்பர் உற்பத்திகள் | 68.2 | 71.0 | 4.1 | 508.4 | 538.1 | 5.8 |
| உணவுப் பொருட்கள் குடிபானம் மற்றும் புகையிலை | 25.6 | 34.8 | 35.8 | 222.4 | 259.1 | 16.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 23.0 | 40.1 | 74.2 | 185.4 | 252.7 | 36.3 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 28.6 | 32.7 | 14.0 | 200.2 | 242.1 | 20.9 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 20.7 | 25.6 | 23.6 | 187.3 | 166.7 | (11.0) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.4 | 6.4 | (13.4) | 80.9 | 138.1 | 70.7 |
| அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் | 12.9 | 11.4 | (11.7) | 55.8 | 72.3 | 29.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பகுதிகள் | 6.4 | 5.8 | (8.3) | 46.0 | 47.2 | 2.6 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 5.2 | 4.0 | (22.6) | 17.7 | 28.0 | 58.3 |
| ஏனையவை | 62.9 | 75.1 | 19.5 | 499.8 | 534.5 | 6.9 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **208.0** | **255.4** | **22.8** | **1,520.6** | **1,815.0** | **19.4** |
| தேயிலை | 108.9 | 131.3 | 20.6 | 835.0 | 1,002.7 | 20.1 |
| வாசனைத்திரவியம் | 35.7 | 50.2 | 40.5 | 194.1 | 248.7 | 28.1 |
| தேங்காய் | 32.3 | 33.8 | 4.5 | 238.3 | 240.1 | 0.7 |
| கடலுணவு | 13.0 | 18.0 | 38.6 | 110.7 | 155.4 | 40.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 11.7 | 13.4 | 14.9 | 83.4 | 96.6 | 15.7 |
| இறப்பர் | 2.3 | 2.6 | 15.3 | 20.9 | 28.7 | 37.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.2 | 3.5 | 58.1 | 19.9 | 23.5 | 18.0 |
| மரக்கறிகள் | 1.9 | 2.5 | 30.8 | 18.3 | 19.5 | 6.6 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.0** | **5.2** | **28.9** | **29.9** | **35.8** | **19.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **866.3** | **1,000.6** | **15.5** | **6,888.1** | **7,413.1** | **7.6** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது.
(ஆ) திருத்தப்பட்டது.

**இறக்குமதிச் செயலாற்றம்**

இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,857 மில்லியனுக்கு 12.6 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்து, இவ்வாண்டுப் பகுதியில் இதுவரை இரண்டாவது மிகஉயர்ந்த இறக்குமதிப் பெறுமதியினைப் பதிவுசெய்தமைக்கு இடைநிலைப் பொருட்களின் மீது, குறிப்பாக, எரிபொருளின் மீது உறப்பட்ட உயர்ந்த செலவினமே காரணமாகும்.

2017 ஓகத்தில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,021 மில்லியனுக்கு 23.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 312 மில்லியனுக்கு 73.0 சதவீத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். இது பெருமளவிற்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 233 மில்லியனுக்கு 110.9 சதவீதத்தினால் அதிகரித்தமையின் மூலம் பெறப்பட்டிருக்கின்றது. மேலும், பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட உயர்ந்த மசகெண்ணெய் விலைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அளவில் குறைப்புக் காணப்பட்ட போதும் மசகெண்ணெய் மீதான இறக்குமதிச் செலவினம் 12.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி, 2017 ஓகத்தில் மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை 2016 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 46.71 உடன் ஒப்பிடுகையில் 2017 ஓகத்தில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 53.07இனை பதிவுசெய்தது. மேலும், இம்மாத காலப்பகுதியில் தங்கத்தின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 65 மில்லியனுக்கு 50.0 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) குறிப்பிடத்தக்களவிற்கு தங்க இறக்குமதிகளின் உயர்ந்த அளவுகள் காரணமாக விளங்கிய வேளையில் அடிப்படை உலோகங்களின் மீதான செலவினம் 52.6 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தன. 2017 ஓகத்தில் புடைவை மற்றும் புடைவைப் பொருட்களின் மீதான செலவினம் துணிகளின் இறக்குமதிகள் மீது உறப்பட்ட உயர்ந்த செலவினம் 7.9 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தன. அதேவேளை இம்மாத காலப்பகுதியில் இரசாயன உற்பத்திகள், கோதுமை மற்றும் சோளம், உணவுத் தயாரிப்புக்கள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகள் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பெருமளவிற்குப் பங்களித்தன. எனினும் 2017 ஓகத்தில் கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் வளமாக்கியின் மீதான இறக்குமதிச் செலவினம் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் முறையே 54.8 சதவீதத்தினாலும், 30.4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

அதேவேளை, 2017 ஓகத்தில் நுகர்வுப்பொருட்களின் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 394 மில்லியனில் பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், 2017 ஓகத்தில் உணவு மற்றும் குடிபானம் மீதான செலவினம் 3.7 சதவீதத்தால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தமைக்கு அரிசி இறக்குமதியின் மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாகும். ஆண்டுக்காண்டு அதிகரித்துச் செல்லும் போக்கின் தொடர்ச்சியாக உள்நாட்டுச் சந்தையில் அரிசியின் பற்றாக்குறையினைப் பூர்த்திசெய்யும்பொருட்டு எடுக்கப்பட்ட வழிமுறைகளைத் தொடர்ந்து 2017 ஓகத்தில் அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தது. அதேவேளை, இம்மாத காலப்பகுதியில் காய்கறிகள், பாற்பண்ணைப் பொருட்கள் மற்றும் பழவர்க்கங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. மேலும், 2017 ஓகத்தில் உணவல்லா நுகர்வுப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் தளபாடப் பொருட்கள், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. எனினும் 2017 ஓகத்தில் இறப்பர் உற்பத்திகள், குடிபானங்கள் மற்றும் வாசனைத்திரவியங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.

2017 ஓகத்தில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 439 மில்லியனுக்கு 2.1 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்து பொறிகள் மற்றும் சாதனங்கள், கட்டட மூலப்பொருட்கள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகளைப் பிரதிபலித்தது. அச்சிடல் பொறிகள், தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் மற்றும் வளிச்சீராக்கி எந்திரங்கள் என்பனவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட திடீர் உயர்வின்

காரணமாக இம்மாத காலப்பகுதியில் பொறிகள் மற்றும் சாதனங்களின் மீதான செலவினம் 2.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இக்காலப் பகுதியில் கட்டடப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 6.8 சதவீத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு, இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகளின் உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும். எனினும், 2017 ஓகத்தில் போக்குவரத்துச் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 10.0 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) வீழ்ச்சியடைந்தமைக்கு முச்சில்லு வண்டிகள், வர்த்தக நோக்கங்களுக்கான வாடகை ஊர்திகள் போன்ற வீதி ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும்.

இவ் அபிவிருத்திகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் இறக்குமதிச் செலவினம் 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 13,599 மில்லியனுக்கு 9.6 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) அதிகரித்தமைக்கு எரிபொருள், தங்கம், அரிசி என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகளே பெருமளவிற்குக் காரணமாகும். எனினும் இக்காலப்பகுதியில் பொறிகள், மற்றும் சாதனங்கள், தனியாள் ஊர்திகள் மற்றும் வளமாக்கி என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது.

2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிறேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**


| வகை | ஓகத்து 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | ஓகத்து 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன - ஓகத்து 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - ஓகத்து 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **393.7** | **393.8** | **0.0** | **2,824.9** | **2,952.1** | **4.5** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 142.6 | 147.9 | 3.7 | 1,039.1 | 1,204.5 | 15.9 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.5 | 22.7 | 1,375.4 | 13.6 | 185.0 | 1,257.2 |
| இதில் அரிசி | | | | | | |
| மரக்கறிகள் | 23.7 | 32.7 | 38.3 | 251.7 | 235.7 | (6.4) |
| பால் உற்பத்திகள் | 18.1 | 22.9 | 26.9 | 157.1 | 202.9 | 29.2 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 39.7 | 19.1 | (51.8) | 195.9 | 188.8 | (3.6) |
| வாசனைத் திரவியம் | 13.6 | 8.0 | (41.2) | 90.4 | 64.3 | (28.8) |
| பழங்கள் | 4.4 | 6.8 | 54.7 | 45.8 | 55.0 | 20.2 |
| குடிபானங்கள் | 13.7 | 6.9 | (49.5) | 63.1 | 54.2 | (14.2) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 27.8 | 28.6 | 2.8 | 221.5 | 218.7 | (1.3) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 251.1 | 245.9 | (2.1) | 1,785.8 | 1,747.6 | (2.1) |
| ஊர்திகள் | 74.1 | 72.6 | (2.0) | 547.1 | 505.0 | (7.7) |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 44.5 | 44.5 | (0.0) | 354.2 | 334.9 | (5.4) |
| தொலைத்தொடர்புக் கருவிகள் | 19.4 | 23.1 | 18.9 | 151.8 | 175.0 | 15.3 |
| வீட்டு உபயோக மற்றும் தளபாடப் பொருட்கள் | 15.3 | 20.7 | 35.4 | 115.6 | 119.3 | 3.3 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 97.7 | 84.9 | (13.1) | 617.1 | 613.4 | (0.6) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **824.0** | **1,020.8** | **23.9** | **6,309.0** | **7,271.7** | **15.3** |
| எரிபொருள் | 180.6 | 312.5 | 73.0 | 1,500.8 | 2,152.8 | 43.4 |


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இதில் மசகெண்ணெய் | 68.6 | 76.9 | 12.2 | 370.1 | 391.1 | 5.7 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 110.3 | 232.7 | 110.9 | 1,030.8 | 1,587.7 | 54.0 |
| நிலக்கரி | 1.7 | 2.8 | 59.1 | 99.9 | 174.0 | 74.2 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 53.8 | 74.4 | 38.3 | 299.3 | 474.6 | 58.6 |
| இதில் தங்கம் | 43.6 | 65.4 | 50.0 | 211.3 | 402.7 | 90.6 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 220.0 | 237.4 | 7.9 | 1,764.7 | 1,781.3 | 0.9 |
| இரசாயன உற்பத்திகள் | 66.5 | 74.9 | 12.8 | 568.1 | 549.9 | (3.2) |
| அடிப்படை உலோகங்கள் | 34.3 | 52.3 | 52.6 | 249.5 | 353.0 | 41.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 23.1 | 31.3 | 35.6 | 164.5 | 225.2 | 36.9 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 17.8 | 23.3 | 31.0 | 154.7 | 200.7 | 29.7 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 16.6 | 20.2 | 21.6 | 116.8 | 129.6 | 10.9 |
| கனிம உற்பத்திகள் | 28.5 | 12.9 | (54.8) | 156.7 | 121.6 | (22.4) |
| வளமாக்கி | 20.6 | 14.3 | (30.4) | 99.2 | 64.0 | (35.4) |
| ஏனையவை | 162.2 | 167.4 | 3.2 | 1,234.8 | 1,219.1 | (1.3) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **429.7** | **438.7** | **2.1** | **3,259.6** | **3,237.7** | **(0.7)** |
| பொறி மற்றும் கருவிகள் | 218.9 | 224.3 | 2.5 | 1,815.4 | 1,738.3 | (4.2) |
| கட்டடப் பொருட்கள் | 144.1 | 153.9 | 6.8 | 1,025.7 | 1,054.8 | 2.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 66.3 | 59.7 | (10.0) | 414.3 | 438.6 | 5.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.3 | 0.8 | 129.7 | 4.1 | 6.0 | 45.8 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.7** | **3.6** | **112.1** | **9.4** | **137.5** | **1,358.3** |
| **மொத்த இறக்குமதி** | **1,649.1** | **1,856.9** | **12.6** | **12,402.9** | **13,599.1** | **9.6** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**








மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**வர்த்தக நிலுவை**

2017 ஓகத்தில் வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2016 ஓகத்தின் ஐ.அ.டொலர் 783 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 856 மில்லியனுக்கு விரிவடைந்தது. அதேவேளை, 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் இதே காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 5,515 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 6,186 மில்லியனுக்குக் விரிவடைந்தது.

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தக நிலுவை**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2017 ஓகத்து காலப்பகுதியில், சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் இம்மாத காலப்பகுதியில் வருகைதந்த 190,928 சுற்றுலாப் பயணிகளுடன் சேர்த்து ஆண்டுக்காண்டு அடிப்படையில் 2.5 சதவீதத்தினால் அதிகரித்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2016இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1,406,854இற்கு 3.5 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்களாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு விளக்கி இக்காலப்பகுதியின் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 51.7 சதவீதத்திற்கு வகைகூறின. இதன்படி, சுற்றுலாவிலிருந்தான[1] வருகைகள் இம்மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 327.6 மில்லின்களாக விளங்கிய வேளையில், ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2016இன் இதையொத்த காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,331.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,413.7 மில்லியனுக்கு அதிகரித்தது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் புவிசார் அரசியல் நிலைமைகள் மற்றும் மோசமான நிலைமைகளினால் தொடர்ந்தும் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீது எதிர்மறையான தாக்கத்தினைத் கொண்டிருந்தன. 2017 ஓகத்தில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2016 ஓகத்தின் ஐ.அ.டொலர் 618.3

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2017ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 556.6 மில்லியனுக்கு 10.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மேலும் 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல்கள் 2016இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,503.3 மில்லியனுக்கு 6.3 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

இவ்வாண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு முதலீடுகள், இரண்டாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 180.7 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலையும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 147.6 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கி ஐ.அ.டொலர் 328.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தன. அரச பிணையங்கள் சந்தையில், வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்தும் வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்து 2017 ஓகத்தில் ஐ.அ.டொலர் 86.4 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தை ஐ.அ.டொலர் 68.0 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் ஒன்றினைக் காட்டின. 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதிகளின் பெறுகைகள் உட்பட அரசாங்கத்திற்கான நீண்டகாலக் கடன்கள் 2016இன் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 574.1 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,031.5 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.

**திரண்ட நிலுவை**

2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2016இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 211.5 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,174.9 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணிவீத அசைவுகளும்**

2017 ஓகத்து இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.7 பில்லியனாக விளங்கி 4.5 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 9.8 பில்லியனாக விளங்கி 5.7 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

2016 இறுதியிலிருந்து 2017 ஒத்தோபர் 16 வரையான ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2.6 சதவீதத்தினால் மிதமான தேய்வொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபாவானது யூரோவிற்கெதிராக 13.0 சதவீதத்தினாலும் ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 9.9 சதவீதத்தினாலும் யப்பானியயென்னுக்கெதிராக 6.2 சதவீதத்தினாலும் கனேடியடொலருக்கெதிராக 9.7 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலியடொலருக்கெதிராக 10.4 சதவீதத்தினாலும் இந்தியரூபாவிற்கெதிராக 7.2 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

### அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | ஓகத்து 2016 ஐ.அ.டொ. மில் | ஓகத்து 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - ஓகத்து 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - ஓகத்து 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 866.3 (ஆ) | 1,000.6 | 15.5 | 6,888.1 (ஆ) | 7,413.1 | 7.6 |
| இறக்குமதிகள் | 1,649.1 | 1,856.9 | 12.6 | 12,402.9 | 13,599.1 | 9.6 |
| வர்த்தக மீதி (தேறிய) | -782.8 (ஆ) | -856.3 | - | -5,514.7 (ஆ) | -6,186.0 | - |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 319.6 | 327.6 | 2.5 | 2,333.1 | 2,413.7 | 3.5 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 618.3 | 556.6 | -10.0 | 4,804.1 | 4,503.3 | -6.3 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | 6.7 | 75.5 | 1,022.8 | -24.1 | 328.3 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) இதில், | 366.6 (ஆ) | 760.2 | 107.3 | 3,673.6(ஆ) | 4,393.3 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 127.1 | 140.3 | 10.4 | 1,036.5 | 1,074.0 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | - | 1,500.0 | 1,500.0 | |
| நீண்ட காலக் கடன்கள் | 239.5 (ஆ) | 619.8 | 158.8 | 1,137.1 (ஆ) | 1,819.3 | |
| வெளிநாட்டு நாணக் கால நிதியிடல் வசதி | - | 550.0 | - | 300.0 | 1,000.0 | |
| ப.நா.நி - வி.நி.நி.பெறுவனவுகள் | - | - | - | 168.1 | 167.2 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள்(உ) | - | - | - | 293.0 | 711.2 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கையின் முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது.
(ஆ) திருத்தப்பட்டது.
(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஆறு மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.